11.02.2026.
CC.No.05/2024
எ.ம.சா.1 (எதிரி) ஜெயகுமார் த/பெ.சுப்பிரமணி.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

என்னிடம் காட்டப்படும் காசோலை (ம.சா.ஆ.1)-ல் 01.04.2023 ஸ்டேட்பேங்க் ஆப் இந்தியா அச்சரப்பாக்கம் கிளை என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி காசோலை எனது வங்கி கணக்கு எண்.20172210047 ஆகும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். அந்த காசோலையில் எவ்வளவு தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 2/-லட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் முத்தரசன் என்பவரிடம் காசோலை கொடுத்தபோது காசோலை நிரப்பப்படாமல்தான் கொடுத்திருந்தேன். எனக்கு மனுதாரர் காசோலை திருப்பப்பட்டது குறித்து 03.07.2023ம் தேதி சட்ட அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார். மனுதாரரின் பெயர் தெரியுமா என்றால தெரியும் அவர் பெயர் பாலு அவரது தகப்பனார் பெயர் தெரியாது. மனுதாரர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் சென்னை குரோம்பேட்டை போக்குவரத்து கிளையில் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறார். நான் எங்கு வேலை செய்கிறேன் என்றால் நான் தாம்பரம் போக்குவரத்து கிளையில் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். நான் பணியில் சேர்ந்து 14 ஆண்டு காலம் ஆகிறது. நான் பணி நிரந்தரம் செய்யப்பட்டுவிட்டேன் என்றால் சரிதான். எனக்கு மாதம் சம்பளம் எவ்வளவு என்றால் பிடித்தம் போக ரூபாய். 30,000/-ம் பெற்று வருகிறேன். என் சம்பளத்தின் பேரில் கடன் பெற்று அதையும் செலுத்தி வருகிறேன். நான் கொடுத்த காசோலை மனுதாரர் மற்றொருவருக்கு தாக்கல் செய்தபோது அதில் போதிய பணம் இல்லையென்று திருப்பப்பட்டுவிட்டதாக வங்கியிலிருந்து 17.06.2023ம் தேதி திருப்பப்பட்டுவிட்டது என்றால் நான் மனுதாரருக்கு காசோலையை கொடுக்கவில்லை.

நான் சொல்வதுபோல் எனது காசோலையை பாலு என்பவரிடம் கொடுத்ததாக சொல்லுவது தவறு என்றாலும் மனுதாரரிடம் காசோலையை கொடுத்துவிட்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மனுதாரரிடம் குடும்ப தேவைக்காக கடன் பெற்றுவிட்டு தற்போது அதனை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரிடம் வாங்கிய கடனுக்கு காசோலையை கொடுத்து ஏமாற்றிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மனுதாரரிடம் வாங்கிய கடன் தொகையை திருப்பி செலுத்த தகுதியிருந்தும், அவரை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் காசோலையை கொடுத்து ஏமாற்றியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

//உண்மை நகல்//

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.